IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.167/2021

Deposition of Witness for P.W.11

| | | |
|---|---|---|
| NAME | - | Thiru. Kumaresan |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | VAO, Chinna palli kuppam |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.09.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை–</u>

நான் தற்போது சின்னப்பள்ளி குப்பம் குரூப் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 2021–ஆம் ஆண்டு மேல் அரசம்பட்டு கிராமத்தில் பணிபுரிந்த போது 27.04.2021 அன்று அலுவல் நிமித்தமாக மதியம் 2.00 மணியளவில் பங்களமேடு கிராமம் வழியாக சென்ற போது, வேப்பங்குப்பம் போலீசார் வெங்கடேசன் என்பவரை பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். முதல் எதிரி வெங்கடேசனை சாட்சி சரியாக அடையாம் காண்பித்தார். நான் அவர்களிடம் என்னை விசாரணை என்று விசாரித்து கேட்டேன். காவல் ஆய்வாளர் என்னிடம் கொலை வழக்கு சம்பந்தமாக எதிரி வெங்கடேசனை விசாரிக்கிறேன் அதற்கு சாட்சியாக என்னையும் என்னுடம் கிராம உதவியாளரையும் கோரினார். எங்களின்

முன்னிலையில் வெங்கடேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தாமாக முன் வந்து கொடுத்ததை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரி வெங்கடேசன் தீர்த்தம் கிராமத்திற்கு வெங்கடேசன் வீட்டிற்கு எங்களை கூட்டிச் சென்று தென்னமட்டையை எடுத்து கொடுத்ததை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். எதிரி வெங்கடேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி Ex.P6. கைப்பற்றுதல் மகஜர் Ex.P7. என்னிடம் காண்பிக்கப்படும் தென்ன மட்டை தான் எதிரி எடுத்து ஆஜர் செய்தது, அந்த தென்ன மட்டை Mo1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரனை</u>

கிராம நிர்வாக அலுவலருக்கு Vigilance Manual என்ற கையேடு உள்ளது என்றால் சரி. அதன் அடிப்படியில் தான் நாங்கள் செயல்பட வேண்டும் என்றால் சரி தான். எனக்கு மேலதிகாரி தாசில்தார் ஆவார். நான் வேறு அலுவலக செல்வதாக இருந்தால் தாசில்தார் அனுமதி பெற்று தான் செல்ல வேண்டும். பங்களாமேடு கிராமத்திற்கு என்ன அலுவல் வேலையாக சென்றேன் என்று ஆய்வாளர் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியாக இருப்பதற்கு தாசில்தாருக்கு எழுத்து மூலமாக சொல்ல வேண்டும் என்றால் சரிதான். தாசில்தாருக்கு சாட்சியாக இருப்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் நீதிமன்றங்களில் போலீசுக்கு சார்பாக பல வழக்குகளில் சாட்சியம் சொல்லியுள்ளேன். எதிரி வெங்கடேசனை எப்போது கைது செய்தார்கள் எங்கு கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் எந்த அலுவலக வேலைக்கு சென்றாலும் என்னுடன் அலுவலக சீல் எடுத்து செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பம் செய்துள்ளேன் அலுவலக முத்திரையிடவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் எதிரி வெங்கடேசனிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை கேள்வி பதிலாக கேட்டு பதிவு செய்துகொண்டார். என்னிடம் காண்பிக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கேள்வி பதில் வடிவத்தில் இல்லை என்றால் சரிதான். எதிரி குடியிருக்கும் வீடு எந்த திசையில் உள்ளது அக்கம் பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தற்போது நினைவில்லை. நான் எதிரி வீட்டிற்கு அழைத்து சென்று எவ்வித வழக்கு சொத்தையும் எடுத்து கொடுக்கவில்லை என்றும் போலீசார் கேட்டதற்கு இணங்க நான் காவல் நிலையத்தில் அனைத்து ஆவணங்களையும் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். போலீசார் இந்த சம்பவம் குறித்து சாட்சியாக இருக்கும்படி எனக்கும் என் அலுவலக உதவியாளருக்கு எந்தவித சம்மனும் கொடுக்க வில்லை என்றால் சரிதான். போலீசார் சாட்சியாக இருக்கும்படி பங்களமேட்டில் இருப்பவரை அழைத்தாரா என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் தென்னைமட்டையை கொட்டாய் முன்பு கைப்பற்றியதாக உள்ளது, குறிப்பாக எந்த இடத்தில் இருந்து கைப்பற்றியுள்ளதாக சொல்லவில்லை என்றால் எதிரி வீட்டிற்கு பின்புறம் கீழே இருந்ததை எடுத்து கொடுத்தார். எதிரி வெங்கடேசன் எங்கள்

முன்நிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், தென்னை மட்டையை வீட்டில் இருந்து எடுத்து ஆஜர்படுத்தவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 03.09.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

Sd./ P.V.Sandilyan,
Additional District Judge(FTC),
Vellore.